**செய்தி வெளியீடு எண் :984** **நாள் : 22.05.2023**

சர்வதேச தேனீ தினத்தை முன்னிட்டு குமரி மாவட்டத்தை சார்ந்த தேனீ வளர்ப்பாளர்க்கு தேசிய அளவிலான விருது

ஒவ்வொரு வருடமும் மே 20 தினத்தன்று தேசிய தேனீ வாரியம் மூலம் சர்வதேச தேனீ தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி இந்த வருடம் மத்திய பிரதேசம் மாநிலம் வாரசோனி வேளாண் கல்லூரியில் பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது இதில் அகில இந்திய அளவில் உள்ள தேனீ வல்லுநர்கள், தேனீ வளர்ப்பவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் தேனீ மற்றும் தேன் மதிப்பு கூட்டு பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது

இதில் ஒரு பகுதியாக தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் பரிந்துரையின் மூலம் சிறந்த தேனீ வளர்ப்போர் மற்றும் சிறந்த தேனீ வளர்ப்போர் சங்கம் என இரண்டு பிரிவுகளில் தேசிய அளவிலான விருது மாண்புமிகு ஒன்றிய வேளாண்மை துறை அமைச்சர் அவர்களால் உலக தேனீக்கள் தினத்தை முன்னிட்டு 20.05.2023 அன்று வழங்கப்பட்டது. இந்த விருது வழங்கும் விழாவில் குமரி மாவட்டத்தை சார்ந்த ஜி ஹனி நிறுவனத்தின் உரிமையாளர் திரு.வே.ஜினோ அவர்களுக்கு சிறந்த தேனீ வளர்ப்பாளர் விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இதில், தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடம் பெற்றது. இது தொடர்பாக இன்று (22.05.2023) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களை சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றனர்.

இந்த நிகழ்வில் வேளாண்மை உற்பத்தி ஆணையர்/அரசு செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இயக்குநர் டாக்டர்.ஆர்.பிருந்தாதேவி, இ.ஆ.ப.,. ஜி ஹனி நிறுவனர் திரு.ஜினோ மற்றும் திரு.பிரபு அவர்களும் கலந்துகொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in